<u>செய்திக்குறிப்பு</u>

## <u>இறப்பு சான்றிதழ் வழங்க லஞ்சம் கேட்டு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் கைது</u>

M.ஜான்சிராணி, (வயது 40), த/பெ. மார்டின் கருணாநிதி, நெ. 2, மாதா கோயில் குறுக்குத்தெரு, கல்குணம் கிராமம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம், என்பவர் தனது பாட்டி திருமதி. தவமேரி என்பவர் வயது முதிர்வின் காரணமாக நோய்வாய்ப்பட்டு கடந்த 08.07.2023 இறந்துவிட்டார் என்றும், அதனை தொடர்ந்து தனது பாட்டியின் இறப்பு சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்யுமாறு கல்குணம் கிராம நிர்வாக அலுவலர் சண்முகசுந்தரம் அவர்களை 26.07.2023 சந்தித்து, தனது பாட்டி தவமேரி இறந்துவிட்ட தகவலை அவரிடம் சொல்லி பதிவு செய்து கேட்டார். அதற்கு கல்குணம் கிராம நிர்வாக அலுவலர் சண்முகசுந்தரம் தன்னிடம் பணம் ரூ.1,000/– தருமாறு கேட்டதாகவும், புகார்தாரருக்கு லஞ்சம் கொடுத்து இறப்பு சான்றிதழ் பெற விருப்பம் இல்லாததால், 28.07.2023 இன்று கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில், புகார்தாரர் கல்குணம் கிராம நிர்வாக அலுவலர் சண்முகசுந்தரம் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி புகார் மனு கொடுத்துக்கொண்டார். அவரது புகார் மனு மீது கடலூர் ஊ.த.க. பிரிவு கு.எண்.10/2023 பிரிவு, 7 of The Prevention of Corruption (Amendment) Act, 2018 படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் இன்று 28.07.2023ம் தேதி வாதி ஜான்சிராணிடமிருந்து ரூ.1,000/– லஞ்சபணத்தை, கல்குணம் கிராம நிர்வாக அலுவலர் சண்முகசுந்தரம் கேட்டு வாங்கியபோது லஞ்ச ஒழிப்பு போலீசார் லஞ்ச பணம் வாங்கிய கல்குணம் கிராம நிர்வாக அலுவலர் சண்முகசுந்தரம் என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். மேலும் குறிஞ்சிப்பாடியில் உள்ள அவரது வீட்டிலும் சோதனை நடைபெற்றது.